## செலவினத் தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சு

---

## 1. நிதி கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

பாதுகாப்பு அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலை பற்றிய் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன அடங்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் என்பன அடங்கிய முழுமையான அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி பிரதம கணக்கீட்டு அலுவலரிடம் கையளிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையானது பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான தன்மை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றது என்பதே நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்பதே எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

---

போதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கதேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றவாறு நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக இடம்பெறக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றினை முறையாக பேணிவருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) துணைப் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் அந்த பயனுள்ள தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சர்ா துல்லியமான முறையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால்,

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று

விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை ஏற்படுத்தக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கம் பொருட்டு அமைச்சின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பயனுள்ள செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமானவாறும் நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு வெளிப்படுத்தல்கள், பிரதான உள்ளக நிருவாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு விளக்கப்பட்டது.

## 1.5 பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

(அ) கடந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவை காணப்படாமையால், மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை கடந்த ஆண்டுடன் இங்குகின்றமை பற்றி குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) பாதுகாப்பு அமைச்சினால் கடந்த வருடங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவையொன்று காணப்படாமையால் நிதிக் கூற்றுக்கள் பற்றிய பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் கொள்வனவு செய்த பொருட்களான 3,400.75 மில்லியன் ரூபா பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் ஏசிஏ 6 படிவத்தின் நிதி சாரா சொத்துக்கள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 267/2018 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏசிஏ 6 படிவத்திற்க ஏற்ப தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் இருந்த பெறுமதி அனைத்தும் சிகாஸ் கணக்குகள் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அகற்றி 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய அனைத்து சொத்துக்களையும் மீள் சேர்ப்பதற்கு திறைசேரிகள் தொழிற்பாட்டு திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டமையினால் அனைத்து பெறுமதிகளும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய மீதியின் கீழ் அறிக்கையிடப்பட்டது. |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ)** வருமானப் பெறுகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிலே 22.60 மில்லியன் ரூபா பெறுமதியான வெடிபொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் என்பன வருமான மதிப்பீட்டு பொருள் கோடல்களில் | அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் 2002 ஜூலை மாதம் 17 ஆம் திகதிய இலக்கம் 2002/01 சுற்றறிக்கையின் பிரகாரம் | சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் எதிர்வரும் காலங்களில் முழு விபரம் அடங்கிய மதிப்பீடினை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுருக்கமான வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு மூலத்தின் கீழும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் தொடர்பில் தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திராமை காரணமாக வருமானத் திணைக்களங்களின் உண்மைத் தன்மை பற்றி பரீட்சிக்க முடியாது போனது. | வெடிபொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் என்பன வருமானக் கணக்குடன் தொடர்புடையதாக வருமான பொருள் கோடல்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றினை தயாரித்தல் வேண்டும். | |
| (ii) | ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் தொழிற்பாட்டு கடமைகள் ஊடாக மீளாய்வு ஆண்டிற்காக இலங்கை தரைப்படையினால் 684.31 மில்லியன் ரூபா தொகை மற்றும் இலங்கை வான் படையினால் 1,833.98 மில்லியன் ரூபா தொகை என்ற அடிப்படையில் மொத்த கூட்டுத்தொகையான 2,518.29 மில்லியன் ரூபா பெறுமதியான வருமானம் ஒன்று கணக்கு பதியப்பட்டிருந்தது. இது பற்றிய அவதானிப்புக்கள் பின்வருமாறு | | ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் தொழிற்பாட்டு பணிகளின் ஊடாக பெறப்பட்ட வருமானம் பற்றிய விபரம் தரைப்படை மற்றும் வான் படை என்பவற்றிடமிருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | - இலங்கை தரைப்படைக்கு அறவிடப் பட வேண்டியுள்ள 726.61 மில்லியன் ரூபா பெறுமதியான நிலுவை வருமானம் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ-1(i) நிலுவை வருமானம் பற்றிய கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை . மேலும் இந்த நிலுவை வருமானத்தினுள் மாளி நாட்டில் அமைதி காக்கும் செயற்பாடுகளுக்காக பெறப்பட வேண்டிய 593.37 மில்லியன் ரூபா பெறுமதியான நிலுவை | வருமான மதிப்பீடுகளின் திருத்தம் மற்றும் நிலுவை வருமான அறிக்கை என்பவற்றினை பரீட்சிப்பதற்காக கணக்காய்விடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | | |
| | - மாளி நாட்டில் அமைதி காக்கும் படையின் செயற்பாடுகளில் பணி புரிவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகளை தயாரிக்கும் பணியானது மீளாய்வு ஆண்டு காலப் பகுதியின் உள்ளேயும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. | மாளி நாட்டிலே அமைதி காக்கும் தொழிற்பாடுகளின் கடமைகள் 2017 டிசம்பர் 24 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் அதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கையினை தயாரிக்கும் பணியை துரிதமாக பூர்த்தி செய்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |
| (iii) | அமைச்சின் சில பிரிவுகள் 2019 சனவரி மாதம் முதல் தனியார் துறைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றிலே நிறுவுவதற்காக வாடகை முற்பணமாக செலுத்தியிருந்த 20.19 மில்லியன் ரூபா தொகை 2016 ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதிய இலக்கம் 250/2016∴(I) உடைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு முறைமைக்கு புறம்பான விதத்தில் செலவினத் தலைப்பு இலக்கம் 103-01-02-13-1508 இன் கீழ் கணக்கு பதியப்பட்டிருந்தது. | முற்பணம் செலுத்துதல் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய இலக்கம் 250/2016/(I) உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் நடவடிக்கை முறைமைகளுக்கு ஏற்ப கணக்கு வைத்தல் வேண்டும். | 250/216/(**i**) உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான முறையில் எதிர்வரும் காலங்களில் குறிப்பு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு பற்றிய இணக்கக்கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 62 அலுவலர்களிடமிருந்தும் 09 மரணித்த அலுவலர்களிடமிருந்தும், 22 ஓய்வுபெற்ற அலுவலர்களிடமிருந்தும், 03 பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிட வேண்டியிருந்த முற்பணத் தொகை 4.44 மில்லியன் ரூபா ஆகக் காணப்பட்டது. அதில் 2.88 மில்லியன் ரூபா கடன் மீதிகள் 05 வருடங்களுக்கு மேல் நிலுவையாக இருந்து வருகின்றன. | தாபன விதிக் கோவையின் xxiv அத்தியாயத்தின் பிரகாரம் நிலுவையாக உள்ள முற்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியாகும் போது இக்கடன் மீதிகளில் 1.45 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது. |

(இ) **வைப்புக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- |
| (i) | அமைச்சின் பொது வைப்பு கணக்குகள் இரண்டின் வைப்பு நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீது என்பவற்றுக்கு இடையே 6.05 மில்லியன் ரூபா வித்தியாசம் ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் நிலவுகின்ற வித்தியாசம் தொடர்பாக விளக்கமளித்தல் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கு கால பகுப்பாய்வின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 02 வருடங்களைத் தாண்டிய 158.50 மில்லியன் ரூபா பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிர்மாணப் பணிகள் முடிவடைந்த ஒப்பந்தங்களின் நிறுத்தி வைத்தல் தொகை தொடர்பாக குறித்த பிரிவுகளிடம் விசாரித்து தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு, அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலக்கம் **002/0115** மற்றும் இலக்கம் **0016/063** வைப்புக் கணக்குகளில் 02 வருடங்களைத் தாண்டிய வைப்புக்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது. இராணுவ தலைமையகத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தில் இதுவரையில் பூர்த்தியடையாமையால் **154.92** பெறுமதியான நிறுத்தி வைத்தல் தொடர்பாக நி.பி. 571 இன் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது உள்ளது. |

**(ஈ) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய நடைமுறை அல்லா சொத்துக்களின் பெறுமதி 23,032.59 மில்லியன் ரூபாவாக இருந்த போதிலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி அல்லாச் சொத்துக்கள் பற்றிய அறிக்கையின் பிரகாரம் அப்பெறுதியானது 6,076.73 மில்லியன் ரூபாவாக அமைந்தமையால் 16,955.85 மில்லியன் ரூபா வித்தியாசம் ஒன்றினை அவதானிக்க முடிந்தது. மேலும் அமைச்சுக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றம் கட்டிடங்கள் என்பவற்றினை இனங்காண்பதற்கான கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் காணப்படுகின்ற நடைமுறை அல்லா சொத்துக்களின் சரியான பெறுமதியை குறிப்பிடுதல் வேண்டும். அமைச்சானது அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு ஒன்றினை மேற்கொண்டு அவற்றினை இனங் கண்டு ஆவணப்படுத்தல் வேண்டும். | இயன்றளவு துரிதமாக இந்த நிலையான சொத்துக்கள் அனைத்தும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படும். எதிர்வரும் காலங்களில் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணக்கெடுப்புகளை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலையான சொத்துக்களின் கீழ் கட்டிட நிர்மாணங்களுடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதி 568.99 மில்லியன் ரூபாவாக அமைகின்ற போதிலும் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளில் அப்பெறுமதியானது 5.67 மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அட்டவணைகளின் பெறுமதி என்பன சமமாக அமைதல் வேண்டும். | 563.32 மில்லியன் ரூபா பெறுமதியான சுஹ-றுபாய கட்டிடத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தினம் வரையில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படாமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. |
| (iii) | 2017 ஜூன் மாதம் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2017 உடைய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்த அமைச்சின் சொத்துக்கள் பற்றிய அறிக்கையானது 2019 மே மாதம் 24 ஆம் திகதியே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | 2017 ஜூன் மாதம் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2017 உடைய சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறிக்கையின் மென் பிரதி ஒன்று 2018 செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் அடுத்த 03 மாதத்திற்குரிய ஒரு சில இற்றைப்படுத்திய சொத்துக்கள் பற்றிய ஆவணம் 2019 மே 24 ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டது. |

**(உ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணி வராமை**

---------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | **பிணை ஆவணம்**<br>நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல் அடங்கிய பிணை பதிவேடு ஒன்றை பேணி வராமை. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் பற்றிய பிணை பதிவேடு ஒன்றை பேணி வருதல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |
| (ii) | **சேதங்கள் பற்றிய பதிவேடு**<br>முப்படைகளின் தலைமையகத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டமானது நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பற்றிய பதிவேடு ஒன்றினை பேணி | நிதிப் பிரமாணம் 110 இன் நடவடிக்கை முறைகளின் பிரகாரம் அதன் கீழுள்ள மாதிரிக்கு ஏற்ப சேதங்கள் பற்றிய பதிவேடு ஒன்றினை | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | |
|---|---|
| வராமை. | பேணி வருதல் வேண்டும். |

**(ஊ) கணக்காய்வு சான்றாதாரங்கள் காணப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வு ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று கட்டுநிதி கணக்கு மீதி ஒன்று காணப்படாத போதிலும் கட்டுநிதி சீராக்கக் கணக்கின் பிரகாரம் 4,936.10 மில்லியன் ரூபா பெறுமதியான மீது ஒன்று காணப்பட்டது. அப்பெறுமதிகள் தொடர்பான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் **267/2018** உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்குகளை தயாரித்தல் வேண்டும். | கட்டுநிதி சீராக்கக் கணக்கின் கணித தவறு ஒன்று காணப்படுவதாக அவதானிக்கப்படுகின்றது. அதனை சீராக்கம் செய்து கட்டுநிதி இணக்கக் கணக்கு எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | அமைச்சுக்கு சொந்தமான வங்கிக் கணக்கு இலக்கம் 0007040191 தொடர்பாக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கு இணக்கக்கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 395 இன் பிரகாரம் மாதாந்த வங்கி கணக்கு இணக்கக் கூற்றினை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். | வங்கி கணக்கு இணக்கக் கூற்றினை தயாரித்து கணக்காய்வு தலைமை அதிபதியிடம் எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படும். |

**(எ) பிரதான கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு அலுவலரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பான சான்றுப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டி உள்ள போதிலும் அதற்கேற்ப செயற்பட்டிராமை.

| | அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயன் வாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலரினால் சான்றுப்படுத்தல் வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு ஏற்ப முறைமையை பயன்மிக்கவாறு பேணி வருவதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி உள்ள போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரத்தினுள் தயாரிக்கும் பணி இடம்பெற்று வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலரினால் சான்றுப்படுத்தல் வேண்டும். மேலும் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற மாதிரிக்கு ஏற்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் ஓ(VI) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக அத்தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |
| (iii) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறித்த காலப் பகுதியினுள் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதிலளிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு அலுவலரினால் சான்றுப்படுத்த வேண்டி உள்ள போதிலும் அறிக்கையின் 5.1 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்க பதிலளிக்கும் போது தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

## (ஏ) சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை

---

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்க்ள ஒழுங்குவிதிகள் மற்றும் பிரமாணங்களின் நடவடிக்கை முறைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பற்றி கீழே விளக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாக | பெறுமதி மில். ரூ. | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
| (i) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16.2 பிரிவு | | அமைச்சினால் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும் அவ்வாறான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16.2 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தற்போது அச்சீட்டுப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள துடன் அது மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| (ii) 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 261/2017 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.2 பந்தி | 2.99 | கணக்கீட்டு அலுவலர் ஒருவரினாலேயே நிலுவை வருமானத்தை அறவீட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. நிலுவை வருமானமானது தொடர்ந்தும் ஒன்று சேர்க்கப்படுவதை தடுப்பதற்காக உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறுள்ள போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் வெடிபொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் என்வற்றுக்கான அனுமதிப்பத்திர வருமானம் 2.99 மில்லியன் ரூபாவாக அமைந்ததுடன் அதில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வருமானமான 2.26 | சுற்றறிக்கையின் நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் இதனை அறவிட்டுக் கொள்வதற்கு சகல மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், துப்பாக்கி அனுமதிப்பத்திரதாரர்கள் ஆகியோருக்கு விழிப்பூட்டல். துப்பாக்கிகளை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்குதல், அனுமதிப்பத்திர கட்டணத்துடன் தண்டப் பணம் அறவிடுவதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மில்லியன் தொகையும் அடங்கியிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட முறைகள் பிரேரிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2015 டிசம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/04/08/01/59 உடைய அரச நிதிச் சுற்றறிக்கை | | சுற்றறிக்கையின் பிரகாரம் பொது கட்டணத்தை அறவிடுவதை திருத்தம் செய்வதற்காக பொருளாதார நிலையின் மாற்றங்களை கவனத்திற் கொண்டு பல்வேறு சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்த) சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணம் தொடர்பில் கடந்த 18 வருட காலமாக எதுவித மாற்றமும் இடம்பெற்றிருக்கவில்லை. | கட்டணத்தை திருத்துவதற்காக 2015 டிசம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/04/08/01/59 உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | துப்பாக்கி அனுமதிப்பத்திர கட்டணத்தை திருத்துவதற்கு பாராளுமன்ற திருத்தச் சட்டம் ஒன்றின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளக் கூடியதாக சட்ட மா அதிபரினால் 2019 பெப்வரி மாதம் 05 ஆம் திகதிய E/28/2019 கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | 2002 ஆம் ஆண்டின் செப்டம்பர் 12 ஆம் திகதிய இலக்கம் 402 உடைய அரச நிதிச் சுற்றறிக்கை | | அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வு ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும் 2019 மே 31 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சின் விடயப் பரப்புடன் நிறுவனங்கள் சேர்க்கப்படல் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி அவசர நிலையானது தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. |

ல்லை.

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 வருமான முகாமைத்துவம்

துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் வருமானம் தொடர்பாக மீளாய்வு ஆண்டுடன் தொடர்புடைய வருடாந்த வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கான தொழிற்பாட்டு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளை இயன்றளவு முழுமையாகவும், சரியாகவும் வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப முறையான வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் செலவிட வேண்டியுள்ள போதிலும் மூலதன செலவினத் தலைப்புக்கள் 25 இற்குரிய 1,664.19 மில்லியன் ரூபா மற்றும் மீண்டு வரும் செலவினத் தலைப்புக்கள் 31 உடன் தொடர்புடைய 51.86 மில்லியன் ரூபா மீதி காணப்படுவதாகவும் அந்த மீதிகளை ஒதுக்கிய தேறிய ஏற்பாடுகள் முறையே 11 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் | நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளை இயன்றளவு முழுமையாகவும், சரியாகவும் தயாரித்தல் வேண்டும். மேலும் வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல் வேண்டும். | போதியவாறு கட்டுநிதி கிடைக்கப் பெறாமை, பெறுகை பணிகள் தாமதமாதல், தேவைகள் ஏற்படாமை, ஏற்பாடுகள் பின்னர் அனுமதிக்கப்படல், பற்றுச்சீட்டுக்கள் கிடைப்பதில் உள்ள தாமதம் உள்ளிட்ட காரணங்கள் நிதி ஏற்பாடுகளின் குறை பயன்பாட்டிற்கு தாக்கம் செலுத்தியுள்ளன. 19 சந்தர்ப்பங்களில் செலவினம் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்ட வித்தியாசத்தை கொண்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | அத்தியவசியத் தன்மை மற்றும் நிதி ஏற்பாடுகள் போதியதாக அமையாமை உள்ளிட்ட காரணங்களைக் குறிப்பிட்டு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் 18 விண்ணப்பங்கள் ஊடாக நிதி ஏற்பாடுகளை மாற்றிக் கொண்டுள்ள போதிலும் அதில் 48.44 மில்லியன் ரூபா மீளாய்வு ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடுகளை மாற்றும் போது உரிய முகாமைத்துவத்துடன் அதனை மேற்கொள்ளல் வேண்டும். | நி.பி. 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றும் பணியானது நிதி ஆண்டின் இறுதி காலாண்டிலே அனுமதிக்கப்படல் காரணமாக உரிய காலத்தில் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்கப் பெறாமை, கட்டுநிதி கிடைக்கப் பெறாமை, 2018 ஆம் ஆண்டிற்கான இறுதி காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அரசியல் குழப்ப நிலை என்பன காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்க முடியாது போதல். |
| (iii) | நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகளை வேறு செலவினத் தலைப்புகளுக்கு மாற்றியதன் பின்னரும் 19 செலவினத் தலைப்புகளுக்குரிய 1,150.97 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி ஏற்பாடுகள் மீதமாக இருந்தமை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றிய நிதி ஏற்பாடுகளை உரியவாறு பயன்படுத்துதல் வேண்டும். | -அதே- |
| (iv) | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டுத் தொகை முழுவதையும் வேறொரு செலவினத் தலைப்பிற்கு மாற்றியிருந்த 09 சந்தர்ப்பங்களை அவதானிக்க முடிந்தது. | தேவைகளை உரியவாறு இனங்கண்டு மதிப்பீடுகள் தயாரித்தல் வேண்டும். பெற்றுத் தரப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை உரிய முறையில் பயன்படுத்துதல் வேண்டும். செலவினங்கள் இடம்பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் நிதி ஏற்பாட்டினை கோருதல் ஆகாது. | பாதுகாப்பு அமைச்சர், சனாதிபதியாக உள்ளமையால் அதற்குரிய செலவினம் சனாதிபதி அலுவலகத்தின் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் செலவின எதிர்பார்ப்புடன் நிதி ஏற்பாடுகளை நிறுத்தி வைத்து பின்னர் வேறொரு செலவினத் தலைப்பிற்கு மாற்றப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிதிப் பிரமாணம் 230 இன் பிரகாரம் குறியீட்டு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளாது மீண்டுவரும் செலவினத் தலைப்பிற்கு மற்றும் 05 மூலதனச் செலவினத் தலைப்புகளுக்கு புதிய கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மற்றும் மேலதிக நிதி ஏற்பாடுகள் என்பவற்றின் ஊடாக 57.93 மில்லியன் ரூபா பெறுமதியான ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் அதில் 6.57 மில்லியன் ரூபா மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 230 இன் பிரகாரம் குறியீட்டு நிதி ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். புதிய கருத்திட்டங்களை முறையாக அனுமதித்துக் கொண்டு நிதி ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொண்டதன் பின்னர் செலவினங்களை மேற்கொள்ளல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொள்ளும் போது குறிப்பிட்டுள்ள செலவினத் தலைப்புக்களின் கீழ் செலவினங்களை எதிர்பார்க்காத போதிலும் ஆண்டின் நடுப் பகுதியில் அச்செலவினத் தலைப்புக்களின் தேவைகள் ஏற்பட்டமையால் நி.பி. 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. |
| (vi) | தேசிய பாதுகாப்பு பற்றிய கற்கை நிறுவகத்தின் மீண்டுவரும் செலவினத்திற்கான 15 மில்லியன் ரூபா தொகை மற்றும் மூலதனச் செலவினத்திற்கான 4 மில்லியன் ரூபா தொகை என்பவற்றுக்குரிய நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் செலவினமானது முறையே 7.25 மில்லியன் ரூபா மற்றும் 1.52 | நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளை இயன்றளவு முழுமையாகவும் சரியாகவும் ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆண்டின் தொழிற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல் வேண்டும். | நிறுவகத்திற்காக கோரிய குறித்த பண்டங்கள் மற்றும் சேவைகள் உடன் சம்பந்தப்பட்ட நிதி அனுமதி மற்றும் குறித்த கொடுப்பனவு என்பன உரியவாறு இடம்பெறாமையினால் நிதி ஏற்பாடுகள் மீதமாக உள்ளது. |

மில்லியன் ரூபா ஆக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் மீதிகள் முறையே 52 சதவீதம் மற்றும் 62 சதவீதம் ஆகிய பயன்பாடுகள் கீழ் மட்டத்தில் நிலவியது.

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கைகளை செய்து கொள்ளல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | நிதிப் பிரமாணம் 94 இன் நடவடிக்கை முறைகளுக்கு புரம்பான விதத்தில் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் மீதமாக இருந்த தேறிய நிதி ஏற்பாட்டினை தாண்டி செலவினத் தலைப்புக்கள் இரண்டிற்குரிய கூட்டுத்தொகையான 12.51 மில்லியன் ரூபா தொகை தொடர்ந்தும் பொறுப்பாக இருந்தது. மேலும் இராணுவ தலைமையகத்தின் நிர்மாணக் கருத்திட்டத்தின் கூட்டுத்தொகை 39.71 மில்லியன் ரூபா ஆக அமைந்துள்ளதுடன் பொறுப்புக்கள் இறுதிக் கணக்கிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 94 இன் நடவடிக்கை முறைகளுக்கு புரம்பான விதத்தில் மீதமாக இருந்த தேறிய நிதி ஏற்பாடுகளைத் தாண்டி பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. மேலும் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும். | ஆண்டின் இறுதி காலாண்டுப் பகுதியில் கட்டுநிதி உரியவாறு கிடைக்கப் பெறாமையினால் உத்தேசிக்கப்பட்டவாறு செயலாற்ற முடியாது போனது. முப்படைகளின் தலைமையக நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு உரியதாக குறித்த பகுதி ஒன்று நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது விடுபட்டுள்ளதுடன் இதன் பின்னர் சரியாக குறிப்பிட வேண்டும் என விடயத்திற்கு பொறுப்பான அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | தேசிய சாரணர் இயக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் உட்பட 05 நிறுவனங்களுக்கான செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகள், வழங்கல், சேவை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் | அனைத்து விதமான ஒப்பந்த ரீதியான பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டியுள்ளதுடன் அவ்வாறான பொறுப்புக்கள் இல்லாத பட்சத்தில் அது பற்றி குறிப்பிடுதல் வேண்டும். | பொறுப்பு ஆவணத்தினுள் அமைச்சின் கீழ் உள்ள கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 06 நிறுவனங்களுக்கான ஒப்பந்த நிர்மாணப் பணிகள், திட்டமிடல், சேவை ஒப்பந்தங்கள் தொடர்பான பொறுப்புக்கள் பற்றிய விபரம் உரிய |

| | | |
|---|---|---|
| அப்பொறுப்புக்களின் கீழ் குறிப்பிட்டிருக்கவில்லை. | | தினத்தன்று சமர்ப்பிக்கப் படாமையினால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க முடியாது போயுள்ளது. |

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------

### 3.1 திட்டமிடல்

----------------

தேசிய சாரணர் இயக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய செயலாற்றுகை குறிகாட்டிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வணிக பணிகளுக்கான வெடி பொருட்களை பயன்படுத்தும் போது பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களை முறைப்படுத்தும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரல், சுய பாதுகாப்பு சேவைகளை நடாத்திச் செல்லும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்கு தேவையான சட்டதிட்டங்களில் திருத்தம் கொண்டு வரல் மற்றும் அதன் செயலாற்றுகையை அளவிடும் குறிகாட்டிகளை வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கவில்லை.

### 3.2 பொறுப்புக்களை நிறைவேற்றாமை

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | -------------- | ----------------------------------- |
| (i) | மாவட்ட உதவி வெடிபொருட்கள் கட்டுப்பாட்டு அலுவலகங்களில் வெடி பொருட்கள் தொடர்பான சிறந்த கட்டுப்பாடு ஒன்றினை ஏற்படுத்தக்கூடியவாறு வெடிபொருட்களை வழங்கும் தகவல்கள்/ ஆவணங்கள் என்பவற்றினை உரியவாறு பேணி வரப்படுவதில்லை என மூன்று மாவட்ட அலுவலகங்களில் திடீர் முற்றுகை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் சிவில் பாதுகாப்புப் பிரிவின் இற்றைப்படுத்தப்பட்ட கணினி தரவு முறைமை ஒன்றினை நிறுவுவதற்கான தேவை பற்றி கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டின் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வெடி மருந்துகள் தொடர்பாக சிறந்த கட்டுப்பாடு ஒன்றினை ஏற்படுத்தக் கூடியவாறு தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய தகவல்கள் / ஆவணங்கள் என்பவற்றினை முறையாக பேணி வருதல் மற்றும் தரவுகளை கணினி மயப்படுத்துவதற்காக கணினி முறைமை ஒன்றினை நிறுவி தகவல்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 ஆம் ஆண்டிலே குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் கல் உடைக்கும் ஆலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வெளிக்கள பரிசோதனைனயின் போது அப்பிரதேசங்களில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாது சட்ட விரோதமான முறையில் வெடி பொருட்களைப் பயன்படுத்தி கற்களை உடைக்கும் 35 வேலைத்தளங்கள் இயங்குவதாக இனங் காணப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குரிய தொழிற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ளல் வேண்டும். 2005 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க வெடி பொருட்கள் (திருத்த) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்ட விரோதமான முறையில் நடாத்திச் செல்லப்படுகின்ற 38 கல் உடைக்கும் வேலைத்தளங்கள் பற்றி உரிய நடவடிக்கை எடுக்குமாறு புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வெளியிட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் விசேட விசாரணைகள் மற்றும் செயல்முறை கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தொடர்பாக அவதானிக்கப்பட்ட கருங்கற்களை உடைப்பதற்காக டைனமைட்டு, வோடர் ஜெல் என்பவற்றுக்கு மேலதிகமாக கல் வெடி மருந்து மற்றும் எமோனியா நைட்ரேட்டு பயன்படுத்துவதாக தெரிய வந்திருக்கும் நிலையில் அது பற்றி கவனம் செலுத்தப்படாதிருந்தது. அவ்வாறே வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளரினால் வழங்க வேண்டிய வெடி பொருட்களின் அளவினை தீர்மானிக்கும் போது மாதாந்த உச்ச கொள்ளளவினை கவனத்திற் கொள்ளாதிருத்தல் உள்ளிட்ட அவதானிப்புக்களுக்காக அமைச்சினால் உரிய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | 2005 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க வெடி பொருட்கள் (திருத்த) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அமைச்சின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை நிறைவேற்றுவதன் கீழ் வெடி பொருட்களை பயன்படுத்தும் போது பாதுகாப்புத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான தொழிற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ளல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |
| (iv) | முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்புத் | 2016 ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | |
|---|---|
| திணைக்களத்தினால் வெளித் தரப்பினருக்கு சேவை வழங்குவதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானம், அதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் மற்றும் திரண்ட நிதியத்திற்கு செய்யப்படுகின்ற வைப்பு என்பன தொடர்பாக அமைச்சு மற்றும் முப்படைகள் என்பவற்றுக்கிடையில் இணக்கப்பாட்டுடனான முறையான செயற்திட்டம் ஒன்று 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிராமை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தும் கருத்திட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 20 மாடிகளைக் கொண்ட ஆட்பதிவுத் திணைக்கள செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 02 தனியார் வங்கிகள் மற்றும் 02 அரச வங்கிகள் ஊடாக அமைச்சினால் 7,550 மில்லியன் ரூபா கடன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் நிர்மாணங்களை மேற்கொண்ட 03 வருட காலப் பகுதியினுள் மூலதன வட்டியாக 1,272 மில்லியன் ரூபா தொகை மற்றும் பெறப்பட்ட கடன் தொகையான 7,512 மில்லியன் ரூபா தொகை என்பவற்றுடன் மொத்த கடன் தொகை 8,784 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதிக் கடன் தொகை 6,827 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. எவ்வாறாயினும் கட்டிடத்தின் பெறுமதியானது மீளாய்வு | 2017 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் 1/2017 உடைய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுஹுருபாய கட்டிட வளாகத்தை நிர்மாணித்து முடிந்ததன் பின்னர் அக்காலப்பகுதியில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அதில் நிறுவப்பட்டுள்ளது. |

ஆண்டின் சொத்துக்கள் ஆவணத்தின் இறுதி வரையில் சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
கடன் தொகையினை அரசாங்கத்தின் கடன் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக 2017 மார்ச் 28 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண காலப் பகுதியினுள் மூலதன வட்டியானது 1,272 மில்லியன் ரூபாவாக சீராக்கம் செய்வது தொடர்பில் தீரமானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை
.

(ii) பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் பொலிஸ் தொடர்பாடல் தேவைகளை பூர்த்தி செய்கின்ற உபாய முறை தொடர்பாடலுக்கான பொதுக் குரல் மற்றும் தரவு மூலங்களின் துணை வலையமைப்பு கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கருத்திட்ட மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 37 இணைப்புக்களை உள்ளடக்கிய வலையமைப்பு முகாமைத்துவ நிறுவகத்திற்கான நுண் அலைவரிசை வானொலி முறைமையை வழங்கி நிறுவும் பணிக்காக 574.9 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக விலை மனுக்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
மேலும் சுய துணை தொடர்பாடல் கோபுரங்கள் 22 நிர்மாணிப்பதற்கான பணிகளுக்கு இடையில் 11 கோபுரங்களை நிரமாணிப்பதற்காக மீளாய்வு ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு

கருத்திட்ட அலகுகளினால் கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் வகையில் திட்டமிட்ட காலப் பகுதியினுள் கருத்திட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளின் பயன்பாட்டிற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பல்வேறு நிறுவனங்களிடம் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள், மோசமான காலநிலை தன்மை, என்டனா கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக கேள்வி அழைப்புக்களை கோருவதற்கு தாமதமாதல் என்பனவாகும்.
புதிய பாதுகாப்பு தலைமையகத்திற்காக அக்குரேகொட கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் இந்த வலையமைப்பு கருத்திட்டத்தை அத்தலைமையகத்துடன் இணைக்கும் பணிகள் பற்றி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடியாது போயுள்ளது.

முடிவடையும் வரையில் அப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் மைக்ரோ அலைவரிசை வானொலி இடைமாற்ற முறைமையை நிறுவும் பணி தாமதம் அடைந்ததன் காரணமாக அப்பணிக்காக 2016 மற்றும் 2017 ஆண்டு காலப் பகுதியினுள் 34.50 மில்லியன் ரூபா பெறுமதியான தொகையினை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 22 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் 02 வருட காலப் பகுதியாக உத்தேச நோக்கத்திற்கு புறம்பான விதத்தில் பயன்படுத்தாது காணப்பட்டது.

### 3.5 பெறுகைகள்

**பாதுகாப்பு படையின் தலைமையகத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்**

| **கணக்காய்வு அதவானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (i) 2014 ஆம் ஆண்டிலே பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த இராணுவ தலைமையக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளின் முழுமையான முன்னேற்றம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 51.3 வீதமாகும். அதன் 1ஆம் கட்டத்தின் கீழ் அத்தியவசிய பகுதிகளான தொடர்பாடல், பாதுகாப்பு கட்டட நிர்மாணம், கழிவு நீர் அகற்றல் மற்றும் நீர் முறைமை என்பவற்றின் நிர்மாண முன்னேற்றம் முறையே 61 வீதம், 58 | ஆலோசனை வழங்கும் நிறுவனத்தின் கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் அமைச்சு என்பவ்றறினால் திட்டமிட்டவாறு கருத்திட்டத்தை நிர்மாணிக்கும் பணிகளை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2015 ஆம் ஆண்டிலே கருத்திட்ட மீளாய்விற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழு அறிக்கை நீண்ட காலமாக தாமதமாதல், அதன் பின்னர் காலவரையறையினுள் கருத்திட்டத்தின் பணிகள் மிக மந்த வேகத்தில் இடம்பெறல் மற்றும் அதே சம காலத்தில் ஏனைய நிர்மாணப் பணிகள் தாமதமாதல் உள்ளிட்ட காரணங்களின் மீது 2015 -2017 ஆண்டுகளில் மற்றும் மீளாய்வு ஆண்டிலே நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு குறைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வீதம் மற்றும் 20 வீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதற்காக மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் ஒதுக்கப்பபடடிருந்த 3920.25 மில்லியன் ரூபா தேறிய ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்திய தொகையானது 2,957.94 மில்லியன் ரூபா மாத்திரமாகும். மேலும் கருத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினமானது 21,961 மில்லியன் ரூபா பெறுமதியான மொத்த கருத்திட்ட மதிப்பீட்டு செலவினத்துடன் ஒப்பிடுகையில் 39.46 வீதமாக அமைந்துள்ளது. அவ்வாறே கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டினை 3 சந்தர்ப்பங்களில் மாற்றம் செய்ப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வு ஆண்டிற்கு சிவில் ஒப்பந்த வேலைகள், கட்டிடக் கலை மற்றும் பொறியியல் ஆலோசனை சேவை உட்பட்ட 119 ஒப்பந்தங்களுக்காக 14,242 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அதில் 4,000 மில்லியன் ரூபா மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் 10,242 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி ஏற்பாடுகளின் பற்றாக்குறை ஒன்று | மீளாய்வு ஆண்டிலே அமுல்படுத்த வேண்டிய பொறுப்புக்களை கவனத்திற் கொண்டு பெறுகைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பூர்த்தி செய்யும் நோக்கில் மொத்தச் செலவினமான 14,242 மில்லியன் ரூபாவிற்குரிய பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அனுமதிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் 4,000 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட போதிலும் 617 மில்லியன் ரூபா பெறுமதியான பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக திரவ நிதியானது போதியளவில் கிடைக்கப் பெறவில்லை. |

நிலவியமையால் பெறுகை திட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் இறுதி காலாண்டுடன் தாக்கம் செலுத்தும் வகையில் பெறுகைத் திட்டம் 12,137 மில்லியன் ரூபா ஆக அமையும் வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ii) <u>பாதுகாப்புச் சேவை கல்லூரியின் மாணவர் விடுதி கட்டிடத்தை நிர்மாணித்தல்</u>.

(i) 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பு சேவைகள் கல்லூரியின் விடுதிக் கட்டிடத்திற்கு சம்பந்தப்பட்ட வளங்கள் ஒப்பந்தப் பணிகள் 46 திட்டமிட்டிருந்த போதிலும் திட்டமிட்ட பெறுகைப் பணிகளில் 123.94 மில்லியன் ரூபாவிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 22 பணிகள் 2018 நவம்பர் மாதம் வரையிலும் பெறுகைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் கொடையாக வழங்கியிருந்த மொத்தத் தொகை 54.59 மில்லியன் ரூபாவாகும். வழங்கல் ஒப்பந்தப் பணிகள் 24 திட்டமிட்ட உரிய காலத்திற்கு 53 நாட்கள் முதல் 287

தொழிற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் கருத்திட்டத்தின் நோக்கமான தூர இடங்களில் இருந்து வருகை தருகின்ற 554 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கும் பணியினை நிறைவேற்றும் வகையில் பெறுகை பணிகளை உரிய தினத்தன்று பூர்த்தி செய்தல் வேண்டும்.

பொறியியல் திணைக்களம் மற்றும் நியமக் குறிப்பீடுகள் என்பன திட்டத் தயாரிப்பு பணிகளின் தாமதம் காரணமாக பெறுகை பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாது போனது.

| | | |
|---|---|---|
| நாட்கள் வரையிலான காலப் பகுதிக்கு தாமதம் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. | | |
| (ii)பெறுகை வழிகாட்டல் கோவை யின் 8.9.1(ஆ) இற்கு புறம்பான வழியில் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் வழங்கப்பட்டிருந்த 66.76 மில்லியன் ரூபா 22 பணிகளுக்குரிய ஒப்பந்த உடன்படிக்கைகள் எழுதி கைச்சாத்திட்டிருக்கவில்லை என்பதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | பெறுகை வழகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கைச்சாத்திடல் வேண்டும். | **2019** ஆம் ஆண்டு முதல் உரிய முறைப்படி கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது**.** |

### 3.6 சொத்து முகாமைத்துவம்

---

| **கணக்காய்வு அதவானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் 05/2016 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் 2018 வருடாந்த பொருள் கணக்கெடுப்பினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 2019 இன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சின் 66 பிரிவுகளின் மற்றும் அமைச்சின் கீழுள்ள 07 நிறுவனங்களுக்கான பொருள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் 05/2016 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 மற்றும் 3.2.6 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறையினுள் பொருள் கணக்கெடுப்பினை மேற்கொண்டு அதன் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நடவடிக்கை எடுத்து அது தொடர்பான | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | | அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

**3.7 அரசாங்க அலுவலர்களின் பிணை வைத்தல்கள்**

| **கணக்காய்வு அதவானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசாங்க நிதி தொடர்பாக மற்றும் களஞ்சிய பணிகளுக்குப் பொறுப்பான அலுவலர்களினால் 612 ஆவது அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு நிதி மற்றும் ஒழுங்கு விதிகள் 880 இன் பிரகாரம் பிணை வைப்புச் செய்ய வேண்டிய போதிலும் அமைச்சின் அந்த அலுவலர்கள் மீளாய்வ ஆண்டின் இறுதி வரையில் பிணை வைத்திருக்கவில்லை. | 612 ஆவது அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு மற்றும் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைப்புச் செய்தல் வேண்டும். | அமைச்சின் விடயப் பரப்புடன் ஒப்பீட்டு வருவதுடன் அமைச்சின் கீழுள்ள நிறுவனத்திற்கு விளக்கப்பட்டுள்ளது. |

**4. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்**

| **கணக்காய்வு அதவானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை** |
|---|---|---|
| அனைத்து அரச நிறுவனங்களினாலும் தமது நிறுவனத்துடன் தொடர்புடைய குறிக்கோள்களின் இலக்குகளுக்குரிய எல்லையினை அறிந்து கொள்ளல் மற்றும் முன்னேற்றத்தை அளவிட்டுப் பார்த்தல் என்பவற்றிற்காக குறிகாட்டிகளைத் தயாரித்தல் வேண்டும். இது பற்றி அமைச்சு விழிப்பூட்டப்பட்டிருந்த போதிலும் அது பற்றிய இலக்கு, அடிப்படை தரவுகள், இலக்குகளை அடைய வேண்டிய இடம் | 2018 மார்ச் மாதம் 16 ஆம் திகதிய இலக்கம் பீஎஸ்/எஸ்பீ/எஸ்பி/3/201 உடைய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் தமது நிறுவனத்திற்குரிய குறிக்கோள் இலக்கு பற்றிய எல்லையினை அறிந்து கொள்ளல் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டி ஒன்றினை தயாரித்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

மற்றும் இலக்கை அடைதலை அளவிடல் என்பவற்றிற்கான குறிகாட்டிகளை இனங்காணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவிட்டுப் பார்ப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவிட்டுப் பார்ப்பதற்கு சரியான தரவு முறைமை ஒன்றினை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நல்லாட்சி

---------------------

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------------

| கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் 16 கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் விசாரணை 1 என்பன மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகள் குறித்த பிரிவுகள்/நிறுவனங்கள் என்பவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அதில் 12 இற்கு 2019 மே 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கடைபிடித்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

### (அ) அனுமதிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி

மீளாய்வு ஆண்டின் இறுதியாகும் போது 77 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனமானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான பதவியணி பற்றிய நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 64 | 51 | 13 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 09 | 06 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 239 | 185 | 54 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 136 | 129 | 7 |
| | **மொத்தம்** | **448** | **371** | **77** |

### (ஆ) பிற தரப்பினரிடம் பெற்றுக்கொண்ட மனிதவளம்

| | கணக்காய்வு அதவானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் தரைப்படையிடம் இருந்து தொழிலாளர்கள் 35 பேரும், 102 அதிகாரிகளும், ஏனைய தரத்தினர் 449 பேரும் அமைச்சின் பணிகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். | கடமை பணிகளுடன் தொடர்புடைய பொறுப்புக்களை உரிய முறையில் ஒப்படைக்கக் கூடியவாறு முறையான பதவிகளை உருவாக்குவதற்கும் நியமனங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |
| (ii) | இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கை நிறுவகத்திற்கு பணிப்பாளர் நாயகம் ஒருவருடன் 3 பணிப்பாளர் பதவிகள், ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் பதவி 1 மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவி 4 என்பவற்றினை | - அதே - | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிரப்புவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2 ½ வருடங்களுக்கு மேல் தாமதிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. தற்காலிக அடிப்படையின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவியணிக்கு 06 மாதத்திற்கு ஒருமுறை 4 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டு வந்திருந்தது. | | |
| (iii) | பிரதி வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளர் பதவி மற்றும் மேலதிக பிரதி வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளர் பதவிகள் 02 என்பவற்றிற்கான வெற்றிடங்கள் நிலவின. மேலும் தமது நிரந்தர கடமை மாவட்டத்திற்கு மேலதிகமாக 03 மாவட்டங்களுக்குரிய பதில் கடமை புரிவதற்கு உதவி வெடி பொருட்கள் அலுவலர் ஒருவரும், தமது நிரந்தர கடமை மாவட்டத்திற்கு மேலதிகமாக ஒரு மாவட்டத்தில் பதில் கடமை புரிவதற்கு உதவி வெடி பொருட்கள் அலுவலர்கள் 05 பேரும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருவரும், | - அதே - | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. |